DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 279/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| Name | ஜெயராஜ் |
|---|---|
| Father / Husband Name | செல்வராஜ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **12.11.2024**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மாமண்டூர் கிராமத்தில் பெட்ரோல் பங்க் வைத்துள்ளேன். கடந்த 14.06.2013 ம் தேதி எனது உறவினரின் இறப்பிற்கு செல்வதற்காக முன் பின் பக்கம் கதவை பூட்டிவிட்டு சென்றோம். 16.06.2013 ம் தேதி மாலை வீட்டிற்கு வந்தோம். முன் கதவு வழியாக உள்ளே சென்று பார்த்தபோது 3 பெட்ரூமில் இருந்த பீரோக்களும் உடைக்கப்பட்டு தெரிந்து உள்ளே இருந்த 13 சவரன் நகைகள் மற்றும் 50 ஆயிரம் பணம் காணாமல் போயிருந்தது. பின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு திறந்திருந்தது. 2 வளையல் (3 சவரன்) கம்மல் – 1 செட் செயின் வெள்ளி கொளுசு வெள்ளி டம்ளர் சாவிகொத்து மற்றும் செல்போன் காணாமல் போனது. இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **( அந்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது நகைகள் கிடைத்துவிட்டதாக காவல் நிலையத்தில் இருந்து அழைத்தார்கள். காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் காட்ட சென்றபோது ஆஜர் 1ம் எதிரியை போலிசார் காட்டினார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை என்னுடைய அம்மாவுடையது. **(புகைப்படத்தில் உள்ள நகைகள் சபொஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கைரேகை நிபுணர்கள் என் வீட்டிற்கு வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நகைகள் எந்த தேதியில் காணாமல் போனது என்று எனக்கு சரியாக தெரியாது. நான் 16 ம் தேதி வந்து பார்த்தபோது காணாமல் போயிருந்தது. முதல் விசாரணையில் நான் நகைகள் காணாமல் போன உடனே புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் அதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. நகையை எத்தனை பேர் யார் எடுத்து சென்றார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் எதிரிகள் என் வீட்டிற்கு வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. போலிசார் சொல்லிதான் 1ம் எதிரியை தெரியும் என்றால் சரிதான். 16 ம் தேதி மாலை 5.00 மணிக்கு நகைகள் காணாமல் போன விவரத்தை

தெரிந்து கொண்ட பிறகு 17 ம் தேதி 3.00 மணிக்கு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

3. சிசி 291/2024 வழக்கில் அசா1 சாமுவேல் எனக்கு தெரியுமா என்றால் அவர் என் உறவினர் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். எனது உறவினர் என் அக்காவின் மாமனார் இறந்து விட்டார். அவர் இறப்பிற்கு சாமுவேல் 14 ம் தேதி வந்திருந்தார். இறப்பிற்கான இறுதி சடங்கு 15ம் தேதி நடந்த்து. இறுதி சடங்கில் மேற்படி சாமுவேல் மற்றும் அவரின் அம்மா கலந்துகொள்ளவில்லை. நான் இவ்வழக்கில் கொடுத்த புகாரும் சிசி 291/2024 ன் வழக்கின் புகாரும் ஜோடிக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் ஒயிட்னர் பயன்படுத்தி தேதியில் திருத்தம் செய்துள்ளேன் என்றால் நான் செய்யவில்லை. குற்ற எண் 154/2013 முதல் தகவல் அறிக்கையில் தேதி ஒயிட்னர் போட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.